இந்தக் கையேடு சிறு, குறு விவசாயிகளின் கற்றலை மேம்படுத்த உரையாடல் முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது

# தேசிய மின்னணு வேளாண் சந்தை சேவைகள் மற்றும் செயல்பாடுகள் பற்றிய அலைபேசி வாயிலான திறந்த வெளி பாடத்திட்ட (மொபிமூக்) பயிற்சிக் கையேடு




## தொழில் நுட்ப பயிற்சிக் கையேடு

**ஆக்கம்:**

ம.சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்.

3 வது குறுக்குத் தெரு, நிறுவனப்பகுதி, தரமணி, சென்னை 600 113, இந்தியா.

**நிதி உதவி:**

காமன்வெல்த் ஆப் லேர்னிங், கனடா.

MSSRF

C·O·L






செயல்படுத்துவோர்

ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் (MSSRF)

கன்னிவாடி, திண்டுக்கல் மாவட்டம்

M.S.SWAMINATHAN RESEARCH FOUNDATION,
KANNIVADI,
DINDIGUL DISTRICT

தொடர்புக்கும் - ஆலோசனைக்கும்

திருமதி. ஆரோக்கியமேரி - 99523 05745

திரு.சேசுராயப்பன் - 96292 24700

திரு. சீனிவாசன் - 99438 80140

## தேசிய மின்னணு வேளாண் சந்தை சேவைகள் மற்றும் செயல்பாடுகள் பற்றிய அலைபேசி வாயிலான இலவச மொபிமூக் பாடத்திட்டம்

---

## FREE MOBILE BASED MASSIVE OPEN ONLINE COURSE (MOBIMOOC) ON e - NAM Services and Operations

---

தொழில்நுட்ப உதவி
இந்திய தொழில்நுட்ப கழகம், கான்பூர்
(Indian Institute of Technology, Kanpur)

நிதி உதவி
காமன்வெல்த் ஆப் லேர்னிங், கனடா
(Commonwealth of Learning, Canada)

---

பாடத்தை கேட்பதற்கு **08046912153**

வருகின்ற பிப்ரவரி 8ம் தேதி முதல் அடுத்த 45 நாட்களுக்கு தொலைபேசியில் தேசிய மின்னணு வேளாண் சந்தையின் சேவைகள் மற்றும் செயல்பாடுகள் குறித்த ஒரு நிமிட பாடத்திட்ட தகவல் வழங்கப்படும். அனைவரும் கேட்டு பயன்பெறுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

## பாடத்திட்ட வடிவமைப்பு, ஒருங்கிணைப்பு மற்றும் செயலாக்கம்:

- திரு.இரா. சீனிவாசன்

## பாடத்திட்ட தயாரிப்பு:

- திருமதி. அ. ஆரோக்கியமேரி
- திருமதி. பெ. முத்துலட்சுமி
- திரு. இரா. சீனிவாசன்

## புத்தக வடிவமைப்பு:

- திரு. த. மணிகண்டன்

## ஒலி வடிவம் வழங்கியோர்:

- திரு.மு. தேவராஜ்
- திருமதி.பெ. முத்துலட்சுமி

## பாடத் திட்ட செயலாக்க உதவி:

- திரு.ஜெ. சேசுராயப்பன்
- திரு. ப. சிவக்குமார்
- திருமதி. ச. சகுந்தலா
- திரு.வெ. திருநாவுக்கரசு

## ஆக்கம்:

- ம.சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை.

## நிதி உதவி:

- காமன்வெல்த் ஆப் லேர்னிங் (COL), கனடா.

MSSRF Publication Number: MSSRF/TM/2025/08

# தேசிய மின்னணு வேளாண் சந்தை சேவைகள் மற்றும் செயல்பாடுகள்


| வ.எண் | பொருளடக்கம் | பாடம் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 1 |
| 2 | தேசிய மின்னணு வேளாண் சந்தை | 4 |
| 3 | இ நாம் இணையதளம் / போர்ட்டல் | 9 |
| 4 | இ-நாம் நன்மைகள் | 6 |
| 5 | இ-நாம் மேலாண்மை | 8 |
| 6 | பண்ணை வாயில் வணிகம் (Farmgate Trade) | 13 |
| 7 | முடிவுரை | 1 |




# அலைபேசி வாயிலான திறந்தவெளி பாடத்திட்டம் (மொபிமூக் - MOBI MOOC)

மொபிமூக் (MOBIMOOC) என்பது அலைபேசி வாயிலான திறந்த வெளிபாடத்திட்டம். இத்திட்டத்தில் பாடங்கள் குரல் வடிவில் பயனர்களின் அலைபேசிக்கே அவர்கள் குறிப்பிட்ட நேரத்தில் ஒலிபரப்பப்படும். இத்திட்டத்தில் குரல் அழைப்பு மூலம் கற்போருக்கு குரல் வடிவிலான பாடங்களைப் ஒலிபரப்பு செய்யப்படுகிறது. இத்தொழில் நுட்பம் மிகவும் எளிமையானது மற்றும் மிகவும் பயனுள்ளது ஆகும். இத்திட்டத்தில் எழுத மற்றும் படிக்கத் தெரியாத என அனைத்து விவசாயிகளும் எளிதாக தாங்கள் இருந்த இடத்திலிருந்தே கற்க முடியும். மேலும், இத்திட்டத்தின் மூலம் ஒரே நேரத்தில் அதிக எண்ணிக்கையிலான கற்போருக்கு/ பயனர்களுக்கு பாடத்தினை குறைந்த செலவில் வழங்க முடியும். இத்திட்டத்தின் சிறப்பம்சம் என்னவென்றால் இத்திட்டத்தின் மூலம் ஒரே நேரத்தில் லட்சக்கணக்கான விவசாயிகளுக்கு இத்திட்டத்தில் இணைய சிறு மற்றும் குறு விவசாயிகள் தங்களிடம் சாதாரன பட்டன் போன் வைத்திருந்தாலே போதுமானது. இதற்கு திறன் அலைபேசி எதுவும் தேவையில்லை. இத்திட்டத்தின் பாடத்திட்டம் விவசாயிகளின் தேவையின் அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட தலைப்பில் விரிவான விளக்கங்களைக் கொண்டிருக்கும். பாடத்திற்கான தகவல்களை பல்வேறு தொழில் நுட்ப நிறுவனங்கள் மற்றும் வல்லுநர்களிடமிருந்தும், இணையதளங்கள் மூலமும் திரட்டப்பட்டுபாடங்கள் தயாரிக்கப்படும். பின்னர் தயாரித்த பாடக்கருத்துக்களை வல்லுநர்கள் மற்றும் அனுபவம் வாய்ந்த விவசாயிகளிடமும் கொடுத்து சரிபார்த்தபின் பாடங்களை குரல் வடிவில் பதிவு செய்து தொழில்நுட்ப நிறுவனத்திற்கு அனுப்பி பின் கற்போருக்கு பாடங்கள் ஒலிபரப்பப்படும். இத்திட்டத்தில் விவசாயிகள் கேட்ட பாடங்களில் ஏதேனும் சந்தேகம் இருந்தால் அதை கேட்டு தெளிவு பெறுவதற்கான வசதிகளும் உள்ளன. எழுத்தறிவு மற்றும் படிப்பறிவற்ற விவசாயிகளை, குறிப்பாக வழக்கமான முறைகளைப் பயன்படுத்தி ஏற்பாடு செய்யப்படும் எந்தவொரு பயிற்சித் திட்டங்களிலும் கலந்து கொள்ள முடியாத பெண்விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களை திறந்தவெளி பாடத்திட்ட பயிற்சியில் பங்குபெறச் செய்வதன் மூலம் அவர்களின் திறனை மேம்படுத்துதலே இப் பாடத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

# 1. முன்னுரை

இந்தியாவில் வேளாண் விளை பொருட்கள் உற்பத்தி செய்வதற்கு முக்கியத்துவம் வழங்கி தேவையான அளவு உற்பத்தி செய்து தன்னிறைவு அடைந்துவிட்டோம் என்பது சாதனைதான். ஆனால் விளை வித்த பொருட்கள் தேவை அதிகம் உள்ள இடங்களில் நல்ல விலைக்குத் விற்றால்தான் விவசாயிகளுக்கு நல்ல இலாபம் கிடைத்து விவசாயிகளின் வாழ்வில் ஒளியினை ஏற்ற முடியும்.விவசாயிகள் வாழ்வில் முன்னேற்றம் அடைய வேண்டும் என்ற நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டதுதான் தேசிய மின்னணு வேளாண் சந்தை (ELECTRONIC - NATIONAL AGRICULTURAL MARKETING (E-NAM) (இ.நாம்). இ-நாம் சந்தையின் சேவைகளையும், செயல்பாடுகளையும் விவசாயிகளிடம் தெரியப்படுத்தி, விவசாய விளை பொருட்களுக்கு உரிய விலை கிடைத்திடும் வகையிலும், விவசாயிகளே தங்களது உற்பத்தி பொருட்களுக்கு சரியான விலை நிர்ணயித்து, தேவைப்படும் நபருக்கு விற்பனை செய்திடும் வகையிலும், இ-நாம் செயல்பாடுகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி விவசாயிகள் பயன்பெறும் வகையிலும் ம.சா. சுவாமிநாதன் ஆரய்ச்சி நிறுவனம், கன்னிவாடி, காமன்வெல்த் ஆஃப் லேர்னிங்-கனடா, ஐஐடி-கான்பூர் இவர்களுடன் இணைந்து மொபிமூக் பாடத்திட்டத்தினை வடிவமைத்துள்ளது.

# தேசிய மின்னணு வேளாண் சந்தை

**2. அறிமுகம்:**

**ராணி:**

என்ன இராமர் அண்ணே ஒரே யோசனையா இருக்காப்ல இருக்கு.

**இராமர்:**

அதுவாம்மா, அறுவடை எல்லாம் முடிஞ்சுப் போச்சு, இத நல்ல வெலைக்கு விக்கணும். அதுதான் என்ன செய்யலாம், எப்பிடி செய்யலாம்னு யோசனையில இருக்கேன்.

**ராணி:**

அதுக்கு ஒரு வழி இருக்குண்ணே.

**இராமர்:**

என்னம்மா வழி இருக்கு.

**ராணி:**

இது மத்திய, மாநில அரசுகள் நம்மள மாதிரி உள்ள விவசாயிகளுக்காக தேசிய மின்னணு வேளாண் சந்தை அப்பிடிங்கற ஒரு சந்தைய உருவாக்கியிருக்காங்க. அத இ-நாம்-னு சுருக்கமா சொல்வாங்க. இது இந்தியாவின் விவசாய விளைபொருட்கள விக்கிறதுக்கான ஆன்லைன் விற்பனை தளமாகும். இது எப்பிடி செயல்படுது, இதை எப்பிடி பயன்படுத்துறதுன்னு பல தகவல்களை இனி வரும் நாட்கள்ல விளக்கமா சொல்றேன் கேளுங்க.

**3. இராமர்:**

பரவாயில்ல ராணி நல்ல பிரயோஜனமான தேசிய மின்னணு வேளாண் சந்தைங்கிற தகவல்களத்தான் கொடுத்திருக்க.

**ராணி:**

ஆமாண்ணே நம்ம வெளவிச்ச பொருட்கள எப்ப வேணுமுன்னாலும், எங்க வேணும்னாலும் இ-நாம் மூலமா விக்கலாம் -ன்னே.

**இராமர்:**

நாம கஷ்டப்பட்டு விவசாயம் செஞ்சு பொருட்கள வெளய வச்சா அதுக்கு யாரோல்ல வெலய நிர்ணயம் பண்றாங்க. நீ சொல்ற இந்த இ-நாம்-ல நமக்கு சரியான வெலைக் கிடைக்குமா?

**ராணி:**

ஒங்க சந்தேகம் சரிண்ணே. இதுல விவசாயே வெலய நிர்ணயம் பண்ணலாம். நம்ம பொருள வாங்குறவரு ஒரு வெலக்கு கேட்பாரு, அந்த வெலய இ-நாம்-லருந்து நம்மகிட்ட கேட்டு நம்ம அந்த வெலக்கு சம்மதிச்சா மட்டும்தான் விப்பாங்க. வெலைய கூட்டறதுக்கோ, கொறைக்குறதுக்கோ நமக்குதான் முழு உரிமையும் இருக்கு.

**4. இராமர்:**

என்னம்மா ஆச்சரியமா இருக்கு. என்னோட பொருளுக்கு நானே வெலய நிர்ணயம் பண்ணலாமா?

**ராணி:**

ஆமாண்ணே.

**இராமர்:**

அதுக்கில்லம்மா, உள்ளூர் வியாபாரிங்கன்னாலே வெலய எவ்வளவு தூரத்துக்கு கொறச்சு வாங்கலாம்னுதான பாப்பாங்க.



**உள்ளூர் வியாபாரிகள்**

**ராணி:**

அண்ணே, இதுல உள்ளூர் வியாபாரிங்க மட்டும் இல்ல இந்தியாவுல இருக்குற எல்லா வியாபாரிகளும் நம்ம பொருள பார்ப்பாங்க. அதனால நம்ம பொருள தேவை எங்க அதிகமா இருக்குதோ, வெல எங்க அதிகமா கிடைக்குதோ அங்கேயே வித்துக்கலாம்.தேவை அதிகமாக இருக்குற எடத்துல நம்மோட பொருளுக்கும் மதிப்பு அதிகமா இருக்கும்ல. அப்போ நம்ம கேட்ட வெலய அந்த வியாபாரி கொடுத்துதான ஆகணும்.

**இராமர்:**

சரியா சொன்னம்மா ராணி. ஏம்மா, இந்த இ-நாம் மூலமா, வெல எங்க அதிகமா கிடைக்குதோ அங்க விக்கலாம்னு சொன்ன சரி. இதுல இந்த இடைத் தரகர்கள் -னு அவங்க தலையீடு இருக்குமாம்மா.

**ராணி:**

அண்ணே, இதுல இடைத் தரகர்களுக்கு வேலையே இல்லன்னே. கை மாத்தி விடறது, காசு பாக்குறதுங்குறது இதுல நடக்காது. நம்மளோட பொருள் ஒரு வியாபாரிக்கு வேணுமுன்னா, அவங்களும் சில நடைமுறைகளை கடைபிடிக்கணும். அதுக்கு இந்த இ-நாம் திட்டத்தில் சில விதிமுறைகள அரசாங்கம் கொண்டு வந்துருக்கு. அதனால கவலையே படவேணாம்.

**5. ராணி:**

என்னண்ணே எங்கயோ வெளிய கௌம்பிப் போறதுக்கு தயாரா இருக்குற மாதிரி தெரியுது.

**இராமர்:**

அதெல்லாம் ஒன்னுமில்லம்மா. ஒனக்காகத்தான் காத்துக்கிட்டிருக்கேன்.

**ராணி:**

என்னண்ணே விசயம்.

**இராமர்:**

இந்த இ-நாம்-ல விவசாய பொருட்களோட எந்தப் பொருள வேணுமுன்னாலும் விக்கலாமா. அதுக்கு இதுல எடமிருக்கா.

**ராணி:**

இல்லன்னே. இதுல விவசாய உணவு பொருட்கள் மற்றும் உணவு அல்லாத இடுபொருட்கள மட்டும்தான் விக்க முடியும். அது மட்டுமில்லாம, விவசாய வெள பொருட்கள மதிப்புக் கூட்டுன பொருளா இருந்தாலும் இதுல விக்க முடியாது.ஏன்னா, இது அரசாங்கத்தோட கொள்கை முடிவு. அரசாங்கம் முடிவு பண்ணாதான் மற்ற பொருட்கள விக்க முடியும்.

**இராமர்:**

என்னம்மா, இந்த இ-நாம் வந்து அரசாங்கம் கொள்கை முடிவு எடுத்து செய்யுறாங்கன்னு சொன்னியே எந்த அரசாங்கம் இத செயல்படுத்துதும்மா.

**ராணி:**

அதுவாண்ணே. இது மத்திய அரசாங்கத்தோட சிறு, குறு விவசாயிகளின் நட்பமைப்பு (SFAC) மூலம் தான் திட்டம் செயல்படுது. இந்தத் திட்டம் நேரடியாக வேளாண் வணிகத் துறையின் மூலம் செயல்படுத்தப்படுகிறது. அந்தத் துறையில் உள்ள அலுவலர்கள் இதை செயல்படுத்துகிறார்கள்.

ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள் **284**

ஒழுங்குமுறை சந்தைப்படுத்துதல் மையங்கள் **157**

தமிழகத்தில் உள்ள 284 ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில், 157 ஒழுங்குமுறை சந்தைப்படுத்துதல் மையங்கள் உள்ளது.

## இ நாம் இணையதளம் / போர்ட்டல்

**6. இராமர்:**

ரொம்ப நல்லதும்மா. இ-நாம்-ல நம்ம வெள பொருள விக்கலாம்-னு சொன்ன சரி. இந்த இ-நாம்-ல எப்பிடி விக்கலாம்-னு கொஞ்சம் சொன்ன நல்லாருக்கும்.

**ராணி:**

பரவாயில்லன்ணே இ-நாம் பத்தி தெரிஞ்சுக்கறதுக்கு ஆர்வம் வந்துருச்சு போலயே. சந்தோசம். சொல்றேண்ணே. கேளுங்க. நமக்கு பக்கத்துல இருக்குற ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்துல போயி நம்ம பேர இ-நாம் இணையதளம்/போர்ட்டல்-ல பதிவு செய்யணும். அதுக்கு தேவையான ஆவணங்கள் என்னென்னா விவசாயோட வங்கி கணக்கு புத்தகம் மற்றும் ஆதார் அட்டை நகல்.

இத அங்க இருக்குற அதிகரிகள்கிட்ட குடுத்து நம்ம பேர பதிஞ்ச பெறகு நம்ம பேருக்கு ஒரு குறியீட்டு எண்ணும், ஒரு கடவுச் சொல்லும் கொடுப்பாங்க. அத வச்சி நம்ம பொருட்கள பதிவு செஞ்சுக்கலாம். அதாவது பொருளோட அளவு, தரம், இரகம் போன்ற தகவல்கள பதிவு பண்ணனும். அது மட்டுமில்லாம ஒரு குறியீட்டு எண்ணைப் பயன்படுத்தி எத்தன மண்டியில வேணுமுன்னாலும் விற்பனை செய்யலாம்.

**7. இராமர்:**

ஏம்மா. இ-நாம் போர்ட்டல். ஐடீ, பாஸ்வேர்டு (குறியீட்டு எண், கடவுச் சொல்) அது இதுன்னு சொல்ற. அதுக்குப் படிச்சிருக்கணுமா? ஏன் கேக்குறேன்னா, என் மச்சான் ஒருத்தரு இருக்காரு. அவருக்கு எழுதப் படிக்கத் தெரியாது. அவரு வெளவிச்சப் பொருள எப்பிடி விப்பாரு.

**ராணி:**

அண்ணே. ஒழுங்குமுறை சந்தைக்குப் போயி ஒங்கத் தகவல்கள கொடுத்தா போதும். இதுக்குப் படிச்சிருக்கணுமுன்னு அவசியமில்லை. அந்த வேலைய செய்யிறதுக்குன்னே ஒவ்வொரு மண்டியிலயும் ரெண்டு அதிகாரிகள்/ஆபிசரு இருப்பாங்க. அவங்க அதப் பாத்துப்பாங்க. அதுமட்டுமில்லண்ணே உழவன் செயலி அப்படின்னு ஒரு அலைபேசி செயலி ஒன்னு இருக்கு. அதுல நம்ம வீட்டுல இருக்குற படிச்ச பிள்ளைங்கள வச்சி, நம்ம பொருட்கள போட்டோ எடுத்து அனுப்புனாலே போதும்.

**இராமர்:**

அப்பிடியாம்மா, அப்ப என் மச்சானையும் கூட்டிக்கிட்டுப் போறேன்.

**8. இராமர்:**

ஏம்மா ராணி மண்டியில ரெண்டு ஆபிஸருங்க இருப்பாங்கன்னு சொன்ன சரி. அவங்க யாரு? என்னென்ன வேலை செய்வாங்க.

**ராணி:**

அதுவான்னே, ரெண்டு அதிகாரிகள்ல ஒருத்தரு ஐடி-னு சொல்ற தகவல் தொழில்நுட்பத் துறையில பட்டம் வாங்குனவரும், இன்னொருத்தரு வேதியியில் துறையில பட்டம் வாங்குனவராகவும் இருப்பாங்க. இந்த ஐடி அதிகாரி நம்ம பொருட்கள கம்ப்யூட்டருல பதிவு செய்வாரு. இவர மண்டி ஆய்வாளருன்னும், இன்னொருத்தரு நம்ம பொருளோட அளவு, தரம், இரகம், ஈரப்பதம் என்னென்னு சோதனை செஞ்சு வாங்கி வப்பாரு. இவர தர ஆய்வாளர் அப்பிடின்னும் சொல்வாங்க.

**9. இராமர்:**

இ-நாம் சந்தையில இருக்குற அதிகாரிகள் வேற என்ன வேலையெல்லாம் செய்யிறாங்கம்மா?

**ராணி:**

நம்ம பொருட்களோட தகவல்கள பதிவு செஞ்சவுடனே, இந்திய அளவுல இருக்குற மத்த ஒழுங்குமுறை சந்தைகளுக்கு இந்தத் தகவல்கள அனுப்புவாங்க. ஒரு பொருள் மண்டிக்கு வந்ததுலயிருந்து, அத விற்பனை செஞ்சு அனுப்புறது, அனுப்புன பொருளுக்கு பணம் வந்துருச்சான்னும், வந்த பணம் உரிய விவசாயிக்கு போயிருச்சான்னும் பாத்துக்குவாங்க. நம்ம பொருளுக்கு பணம் விவசாயிகளுக்கு கரெக்டாவும் கொறயாமயும் போகுகதான்னு பாத்துக்கிறதும் இவங்க வேலைதான். அது மட்டுமில்லாம எந்தெந்த நேரத்துல எந்தப் பொருள் ஏலம் விடுறாங்கங்குற தகவலையும் விவசாயிகளுக்குத் தெரிவிப்பாங்க.

**10. ராணி:**

அண்ணே, இ-நாம்-ல பதிவு செய்யிறதுக்கு போறப்ப சில ஆவணங்கள எடுத்துக்கிட்டு போகணும்.

**இராமர்:**

நேத்தே கேக்கணுமுன்னு நெனச்சேன்மா. இந்த ஆதார் கார்டு தான எடுத்துக்கிட்டுப் போகணும்.

**ராணி:**

அதுமட்டுமில்லண்ணே. இந்த ஆதார் கார்டு நகலோட வங்கி பாஸ் புத்தக நகலயும் எடுத்துக்கிட்டுப் போகணும்.

**இராமர்:**

பாஸ்புத்தக நகலெல்லாம் எதுக்கும்மா?

**ராணி:**

அண்ணே அதுதான் ரொம்ப முக்கியம். நீ விக்கிற பொருளுக்கான பணத்த, நீ கொடுக்குற வங்கி கணக்குல தான் போடுவாங்க. அதனால பாஸ்புக்கோட முன் பக்கத்த ரொம்ப தெளிவா எல்லா விவரமும் தெரியிற மாதிரி எடுத்துக் கொடுக்கணும். ஒரு நம்பர் தப்பானாலும் நமக்கு பணம் வர்றதுக்கு லேட்டாயிடும்.

1. ஆதார் கார்டு நகல்
2. வங்கி கணக்கு புத்தக நகல்

**இ - நாம் இல் பதிவு செய்ய கொண்டு செல்ல வேண்டிய ஆவணங்கள்**

**இராமர்:**

ஓ, அப்பிடியாம்மா. அப்போ ஆதார் நகலையும், பாஸ்புக் நகலையும் ரொம்பத் தெளிவா எடுத்துக்கிட்டுப் போயிர்றேன்.

**11. இராமர்:**

ஏம்மா, இந்த மண்டியில இ-நாம் மூலமா பொருள வித்து பயனடஞ்சவங்க எத்தன பேரு, பணம் முறையா எல்லாருக்கும் போயி சேர்ந்துருக்கா, ஏதாவது பிரச்சனை வந்துருக்கான்னு கொஞ்சம் தெளிவா சொல்லும்மா.

**ராணி:**

அண்ணே இருங்க. பொறுமையா ஒவ்வொரு கேள்வியா கேளுங்க. நானும் ஒன்னொன்ன பதில சொல்றேன். இந்த இ-நாம் மூலமா இதுவரைக்கும் இந்தியா முழுவதும் 33 இலட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகளும், 10000-ற்கும் மேற்பட்ட வியாபாரிகளும், 200-க்கும் மேற்பட்ட உழவர் உற்பத்தியாளர் கம்பெனிகளும் பயனடஞ்சிருக்காங்க. விவசாயிகளோட பொருளை விற்பனை செஞ்ச 3 மணி நேரத்துல பொருளுக்கான பணத்தை அந்த விவசாயியோட வங்கி கணக்குல பணம் வரவு வச்சிருவாங்க.








**இ-நாம் மூலமாக பயனடைந்த விவசாயிகள்**

**12. இராமர்:**

விவசாயோட வங்கிக் கணக்குக்கு பணம் அனுப்புவாங்கன்னு சொன்னியேம்மா. பணம் அனுப்புறதுலயோ, பெறுவதிலயோபிரச்சனை ஏதாவது வந்தா என்னம்மா செய்யுறது.

**ராணி:**

அதுவாண்ணே. நேத்து கொஞ்சம் நேரமாயிடுச்சுன்னு கௌம்பிட்டேன். இப்ப சொல்றேன்ணே. ஒருத்தரோட கணக்குல இருந்து இன்னொருத்தர் கணக்குக்கு பணம் அனுப்புனாங்கன்னா, ஒரு கணக்குல பணம் கொறஞ்சிருக்கணும். இன்னொரு கணக்குல பணம் கூடியிருக்கணும். இந்த ரெண்டு நடவடிக்கைகள் தான் இருக்கும். இதுல ஒரு கணக்குல மட்டும் பணம் கொறஞ்சிருந்தா, பணம் அனுப்பப்பட்ட அந்த கணக்கு செயல்படாம இருக்கும்.இல்லன்னா, அந்த கணக்குல கடன் வாங்கி கட்டாத கணக்கா இருக்கும். அதுவும் இல்லன்னா கணக்கு நம்பர எழுதுனதுல ஏதாவது நம்பர தவறா எழுதியிருக்கணும். மத்தபடி பணம் பட்டுவாடா செய்யிறதுல எந்தப் பிரச்சனையும் இல்ல. இந்தப் மாதிரியான சின்ன பிரச்சனைகளை சீக்கிரம் சரி செஞ்சு பணத்த அனுப்பிருவாங்க.

**இராமர்:**

அப்பிடியாம்மா.

**ராணி:**

ஆமாண்ணே. இதுவரைக்கும் 140 இலட்சம் குவிண்டாலுக்கு மேல விவசாய விளை பொருட்கள் விற்பனை செஞ்சிருக்காங்க.ரூ.3500 கோடிக்கு மேல பண பட்டுவாடா நடந்துருக்குது.

**13. இராமர்:**

நம்ம தமிழ்நாட்டுல மட்டும் இதுவரைக்கும் எத்தன பேரு இந்த இ-நாம் சந்தை வணிகத்துல ஈடுபட்டு பயனடஞ்சிருக்காங்கங்குற வெவரத்த கொஞ்சம் சொல்லும்மா.

**ராணி:**

அண்ணே நம்ம தமிழ்நாட்டுல உள்ள விவசாயிகள்ல 25 சதவீதம் மட்டுந்தான் இ-நாம் போர்ட்டலை பயன்படுத்துறாங்க. தமிழ்நாட்டோட 7 கோடி மக்கள் தொகையில 70 சதவீதம் அதாவது 5 கோடி மக்கள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ விவசாயத்தில ஈடுபட்டுகிட்டு வர்றாங்க. இதுல 1.5 கோடி குடும்பங்கள் இருக்காங்க. தோராயமா 40 இலட்சம் விவசாயிகள்ல 3 இலட்சம் விவசாயிகள் மட்டுந்தான் இ-நாம்-ல் பதிவு செஞ்சு பயனடைஞ்சுக்கிட்டு வர்றாங்க. இந்த விசயத்துல மற்ற மாநிலங்களைக் காட்டிலும் நம்ம தமிழ்நாடு பின் தங்கியிருக்கு. இ-நாம் பத்திய விழிப்புணர்வு நம்ம தமிழ்நாட்டு விவசாயிகள்கிட்ட ஏற்ப்பட்டாத்தான் நம்ம வெவெசாயிங்க விவசாய வௌ பொருளுக்கு நல்ல வெல கிடைக்கும்.

**14. இராமர்:**

ஏம்மா இந்த இ-நாம் பத்தி நம்ம விவசாயிகள் கிட்ட விழிப்புணர்வை ஏற்படுத்த அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் என்னம்மா?

**ராணி:**

அண்ணே அரசாங்கமும் கடந்த ஒரு வருசத்துக்கு மேல இ-நாம் அதிகாரிகளுக்கு அதாவது தமிழ்நாட்டுல இருக்குற 284 ஒழுங்குமுறை சந்தையில் இருக்குறவங்களுக்கு பயிற்சிகள், கூட்டங்கள் நடத்தி விவசாயிகளுக்கு விழிப்புணர்வ ஏற்படுத்துற பல முயற்சிகள எடுத்துக்கிட்டுதான் இருக்காங்க. அதோட நம்ம அத்மா திட்டத்து மூலமவும் விவசாயிகள் மத்தியில விழிப்புணர்வு ஏற்ப்படுத்திக்கிட்டு வர்றங்க. அதுமட்டுமில்லாம இ-நாம் திட்டத்தப் பத்திய விபரங்கள விளம்பரங்கள் மற்றும் நோட்டீஸ்கள் மூலமாகவும் விவசாயிகள் மத்தியில விழிப்புணர்வு ஏற்படுத்திக்கிட்டு வர்றாங்க. இ-நாம் மூலமா பயனடைஞ்ச விவசாயிகள் மற்ற விவசாயிகள்ட்ட இதோட நன்மைகளை எடுத்துச் சொல்றது மூலமா அவங்களுக்கு ஒரு நம்பிக்கை வரும். அப்பதான் விவசாயிகளும் நம்பி தங்களோட வெளைபொருட்கள விக்கிறதுக்கு முன்வருவாங்க.






**விவசாயிகள் மத்தியில் இ-நாம் திட்டத்தப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துதல்**

## இ-நாம் நன்மைகள்

**15. இராமர்:**

இந்த இ-நாம் வணிகத்துல என்னென்ன நன்மைகள்லாம் இருக்குன்ன கொஞ்சம் தெளிவா சொல்லேம்மா.

**ராணி:**

அண்ணே கேக்குறதுக்கு நீ இவ்வளவு ஆர்வமா இருக்கறப்ப நா சொல்ல மாட்டேனா.

சொல்றேண்ணே. இ-நாம் போர்ட்டலை பயன்படுத்தி ஒரு விவசாயி வியாபாரம் செய்யும் புரிதல் இருந்தா, நாம விவசாயம் செஞ்சு வௌளவிச்ச பொருள் வீடு வந்து சேர்றதுக்குள்ள அதுக்கு வெல வக்கிறது நடக்காது. முன் பணம் கொடுக்குறேங்குற பேருல பொருளோட அளவு, மதிப்ப கொறக்குறதும் நடக்காது. தன்னோட பொருளுக்கு தானே வெலய நிர்ணயம் செஞ்சு, தான் விரும்பிய நேரத்துல வித்துக்கலாம்.

**இராமர்:**

நல்லா தெளிவா சொன்னம்மா.

**16. இராமர்:**

இ-நாம்-ல நம்ம பொருளுக்கு நாமே வெல வைக்கலாம்னு சொன்னியே. நா என்ன வெல சொன்னாலும் வாங்குவாங்கலாம்மா?

**ராணி:**

அண்ணே அப்டியில்ல.அதுக்கும் ஒரு வரைமுறை இருக்கு. அதுதாண்ணே குறைந்தபட்ச ஆதரவு விலைங்கறது.

**இராமர்:**

அது என்னம்மா குறைந்தபட்ச ஆதரவு விலை.

**ராணி:**

அது என்னன்னா, உதாரணத்துக்கு ஒன்னோட மக்காச்சோளத்த குவிண்டால் ரூ.2000-ன்னு வெல வச்சிருந்தா, அந்த 2000-க்கு மேலதான் வியாபாரிங்க ஏலம் கேக்கணும். அதுக்கு மேல எவ்வளவு வெலக்கு நீ கொடுக்கணும்னு நினைக்கிறயோ அந்த வெலக்கு விக்கலாம். அதுலயும் அந்தப் பொருள் ரூ.2000 மதிப்பு இருக்குதான்னும், அரசாங்கம் அறிவிச்ச அந்தப் பொருளுக்கான குறைந்தபட்ச ஆதரவு வெலக்குக் கீழே போகாமாலும் பாத்துக்குவாரு. அப்பிடிதான் நம்ம பொருள விக்க முடியும். இதுல யாரும், யாரையும் ஏமாத்த முடியாது.

**17. இராமர்:**

இந்த இ-நாம் வணிகத்துல இந்த வியாபாரிங்க எப்பிடிம்மா கலந்துக்குவாங்க?

**ராணி:**

நல்ல கேள்விய தான் கேட்டுருக்கண்ணே. இந்த இ-நாம் வணிகத்துல விவசாயி, வியாபாரின்னு ஒரு புரிதலுக்காக சொல்றதுதான்.இதுல பொருள விக்கிறவங்க, பொருள வாங்குறவங்க அப்பிடின்னுதான் கணக்கு. ஒரு பொருள விக்கிற விவசாயி, அவருக்குத் தேவையான ஒரு பொருள வாங்கலாம்.

அப்ப அவரு வியாபாரியா வர்றாரு. இ-நாம் இணையதளம்/போர்ட்டல்ல எப்படி ஒரு விவசாயி விவசாய தன்னோட வெளைபொருள விக்கிறதுக்கு பதிவு செஞ்சாரோ அப்பிடித்தான் வியாபாரியும் விவசாய வெளைபொருள வங்குறதுக்கு பதிவு செய்யணும். இவருக்கும் குறியீட்டு எண்/ஐடீ, கடவுச்சொல்/பாஸ்வேர்டு கொடுப்பாங்க. இத வச்சி அவருக்குத் தேவையான பொருள வாங்கிக்கலாம்.

**18. இராமர்:**

ஏம்மா, பொருள விக்கிறதுக்கு ஆதார், பாஸ்புக் நகல் கொடுத்த மாதிரி, பொருள வாங்குறதுக்கும் ஏதாச்சும் கொடுக்கணுமா?

**ராணி:**

சரியா கேட்டண்ணே.பொருள வாங்குற வியாபாரிங்க ஆதார், பாஸ்புக் நகல் மட்டுமில்லாம ஒருங்கிணைந்த ஒற்றை உரிமம் அப்பிடிங்கற லைசன்ஸ் (UNIFIED SINGLE LICENSE (USL)) கொடுக்கணும்.

**இராமர்:**


இந்த லைசன்ஸ எங்கம்மா வாங்கணும். யாரு கொடுப்பாங்க.

**ராணி:**

இ-நாம்-லயே ஒரு படிவம் கொடுப்பாங்க. அத பூர்த்தி செஞ்சுக் கொடுக்கணும். அப்புறம் அவங்க கேக்குற சில ஆவணங்களையும் கொடுக்கணும். அது என்னன்னு நாளைக்கு சொல்றேண்ணே.

**இராமர்:**

சரிம்மா.




**இ-நாம் இணையதளம்**

**19. ராணி:**

அண்ணே, அண்ணே.

**இராமர்:**

இதோ வந்துட்டேம்மா. வாம்மா, நேத்து சொல்லிட்டுப் போனியே லைசன்ஸ் வாங்குறதுக்கு என்ன ஆவணம் கொடுக்கணுமுன்னு, அத சொல்றதுக்குதான வந்துருக்க.

**ராணி:**

ஆமாண்ணே. அந்த விவசாய வெளைபொருட்கள வங்குறதுக்கான உரிமத்த/லைசன்ஸ வாங்குறதுக்கு ஆதார் கார்டு நகல், GST பைல் செய்த நகல், வங்கியில் ரூ.5 இலட்சத்திற்கு வரவு, செலவு செஞ்சதுக்கான வங்கியால வழங்கப்பட்ட உத்தரவாத சான்றிதழ் இதையெல்லாம் கொடுத்தா நமக்கு 10 நாளுக்குள்ள உரிமம்/லைசன்ஸ் கொடுத்துருவாங்க.

**இராமர்:**

GST, ரூ.5 இலட்சம் வரவு, செலவு அப்பிடின்னு சொல்றியே, சின்ன வியாபாரிங்க எப்பிடிம்மா இத வாங்கிக் கொடுப்பாங்க.

**ராணி:**

அண்ணே. சின்ன வியாபாரிங்க, பக்கத்துல இருக்குற ஒன்னு, ரெண்டு ஊருல மட்டும் இ-நாம் மூலமா பொருள வாங்கிக்கிறேன்னு சொன்னா இந்த லைசன்ஸ் தேவையில்லண்ணே அதுக்கு மாவட்ட அளவுல உள்ள உரிமம்/லைசன்ஸ் மட்டும் வாங்குனா போதும்.




**இ-நாம் லைசன்ஸ்**

**20. ராணி:**

என்னண்ணே எங்கயோ பார்த்து தீவிரமான யோசனையில் இருக்க.

**இராமர்:**

அது ஒன்னுமில்லம்மா. இந்த உரிமம்/லைசன்ஸ பத்திதாம்மா கொஞ்சம் கொழப்பத்துல இருக்கேன்.

**ராணி:**

அதுல என்னண்ணே ஒனக்குக் கொழப்பம்.

**இராமர்:**

சின்ன வியாபாரிங்களுக்கு லைசன்ஸ் மாவட்ட அளவுல உள்ள உரிமம்/ லைசன்ஸ் மட்டும் வாங்குனா போதும். பெரிய, பெரிய வியாபாரிங்க இந்த லைசன்ஸ வச்சிருப்பாங்களா. அதனால அவங்களுக்கு என்ன பிரயோஜனம்.

**ராணி:**

இந்த லைசன்ஸ் வச்சிருக்கிற பெரிய வியாபாரிங்க, ஓங்கிட்ட வாங்க முடியாத பொருட்கள இந்தியாவுல இருக்குற எந்த மாநிலத்துல உள்ள ஒழுங்குமுறை சந்தையில இருந்தும் வாங்கிக்கலாம். எந்த நேரத்துல, எந்த எடத்துல பொருளோட விலை குறைவா இருக்குங்குறதையும் இ-நாம் மூலமா தெரிஞ்சிக்கிட்டு வாங்கிக்குவாங்க. அதுக்கு ஒருங்கிணைந்த ஒற்றை உரிமம் அப்படிங்குற ஒரு உரிமம்/ லைசன்ஸ மட்டும் வாங்குனாப் போதும். வடநாட்டுல வௌயுற பொருள்ல இருந்து இப்ப இ-நாம்-ல விற்பனை செய்யிறாங்க. ஜம்மு-காஸ்மீரில் உள்ள ஒழுங்குமுறை சந்தையின் மூலம் பொருட்களை வாங்குவதற்கு லைசன்ஸ் தற்சமயம் தேவையில்லை. தமிழகத்தில் வாங்கிய லாக் இன் ஐடீ மட்டும் இருந்தால் போதுமானது. நியூடெல்லி மற்றும் ஜம்மு-காஸ்மீர் டீமிற்கு மெயில் அனுப்பி பொருட்களை வாங்குவதற்கு ஏற்பாடு செய்வார்கள்.

**இராமர்:**

அப்பிடியாம்மா. ரொம்ப சந்தோசம்.

## இ-நாம் மேலாண்மை

**21. இராமர்:**

இ-நாம் வணிகத்துல ஒழுங்குமுறை விற்பனை கூடங்களை ஒருங்கிணைக்கிறது யார்?

**ராணி:**


மாநில அளவுல ரெண்டு பேரு ஒருங்கிணைப்பாளர்களா இருப்பாங்க. அதுல ஒருத்தர் ஒவ்வொரு மாவட்டத்துக்கும், பயிற்சி மற்றும் கூட்டங்களுக்கு போயி, தேவையான மேம்படுத்தப்பட்ட தகவல்களையும், செயல்பாடுகள்ல இருக்குற நடைமுறை சிக்கல்களுக்கும், பிரச்சனைகளுக்கும், சந்தேகங்களுக்கும் தீர்வு சொல்லுவாரு. இன்னோருத்தர் சென்னையில இருக்குற தலைமை அலுவலகத்துல இருந்துக்கிட்டு தமிழ்நாட்டோட அனைத்து ஒழுங்குமுறை சந்தைகளோட செயல்பாடுகள் பத்திய தகவல்களை ஹைதராபாத் மற்றும் டெல்லியில் உள்ள உயரதிகாரிகளுக்கு வழங்குவார்.

**22. இராமர்:**

இ-நாம்-ல் இருந்து நமக்குத் தேவையான தகவல்கள யாருகிட்ட இருந்து வாங்கலாம்குற வெவரத்தக் கொஞ்சம் சொல்லும்மா.

**ராணி:**

மேலாண்மை தகவல் அமைப்பு மூலமா இ-நாம் பத்தின எல்லாத் தரவுகளையும் 10 நிமிசத்துக்குள்ல எடுத்துற முடியும். உதாரணமா உளுந்து அதிகமாக விளையுற மாநிலம், எந்த மாதம் சாகுபடி செய்யப்படுது, எந்த மாதம் அறுவடையாகி விற்பனைக்கு வருது, எந்த மாசங்கள்ல அதிகபட்ச விலை கிடைக்குது, எந்த மாசத்துல கொறஞ்ச வெல கிடைக்குது அப்படிங்குற தகவல்களை விவசாயிகளுக்கு தெறிவிக்கிது. இதனால் விவசாயி தனக்கு சாதகமான நேரத்தில் தன் பொருளை வெளைவிக்கிறதுக்கும், விற்பனை செய்யவும் முடியும்.


enam.gov.in/web/dashboard/trade-data

State: -- All -- | APMC's: -- Select APMCs -- | Commodity: -- Select Commodity -- | From date: 27-04-2025 | To date: 27-04-2025 | Refresh

Trading detail on: 27-04-2025 to 27-04-2025

Page: 1

| State | APMC's | Commodity | Price in Rs. | | | Commodity Arrivals | Commodity Traded | Unit | Date |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | Min Price | Modal Price | Max Price | | | | |
| MAHARASHTRA | ATPADI | POMEGRANATE - BHAGAWA | 15 | 45 | 108 | 28,680 | 55,800 | Kg | 27-04-2025 |
| HARYANA | KARNAL | WHEAT-BHANSI | 2,426 | 2,426 | 2,430 | 1,740 | 14,335 | Qui | 27-04-2025 |
| MADHYA PRADESH | TIKAMGARH | WHEAT | 2,400 | 2,450 | 2,470 | 0 | 13,633 | Qui | 27-04-2025 |
| RAJASTHAN | MALPURA | MUSTARD | 5,400 | 5,800 | 6,311 | 2,692 | 11,096 | Qui | 27-04-2025 |
| ANDHRA PRADESH | GUNTUR | CHILLI-TEJA | 1,065 | 11,000 | 17,000 | 0 | 9,292 | Qui | 27-04-2025 |
| RAJASTHAN | MALPURA | CHANA (BENGAL GRAM) | 5,250 | 5,375 | 5,450 | 1,644 | 8,068 | Qui | 27-04-2025 |
| HARYANA | JULANA | WHEAT | 2,435 | 2,435 | 2,435 | 0 | 7,940 | Qui | 27-04-2025 |
| RAJASTHAN | KOTA | PADDY | 2,176 | 3,201 | 3,645 | 653 | 6,861 | Qui | 27-04-2025 |
| UTTAR PRADESH | URAI | WHEAT | 2,450 | 2,450 | 2,455 | 1,790 | 5,511 | Qui | 27-04-2025 |
| RAJASTHAN | KOTA | CHANA (BENGAL GRAM) | 4,981 | 5,300 | 5,565 | 854 | 5,239 | Qui | 27-04-2025 |
| RAJASTHAN | KOTA | WHEAT | 2,245 | 2,471 | 2,587 | 27,205 | 5,058 | Qui | 27-04-2025 |

## இ-நாம் தரவுகள்

**23. இராமர்:**

நம்ம தமிழகத்துல இதுவரைக்கும் மொத்தம் எத்தன ஒழுங்குமுறை சந்தைகள் இ-நாம்-திட்டத்துல இணஞ்சுருக்குங்குற வெவரத்த கொஞ்சம் சொல்லும்மா?

**ராணி:**

முதல் கட்டமாக 2017-18-ல் 23 சந்தைகளும், 2020-ல் 40 சந்தைகளும், 2022-ல் 64 சந்தைகளும், 2023-ல் 40 சந்தைகளும் ஒருங்கிணைக்கப்பட்டன. 9 இலட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் இ-நாம்-திட்டத்தோட இணயதள பணப்பரிவர்த்தனை மூலமா பயனடைஞ்சுருக்காங்க.

**இராமர்:**

ஏம்மா, இந்த இ-நாம் திட்டத்துல எனஞ்ச ஒழுங்குமுறை சந்தைகள்ல விற்பனை செயல்பாடுகள் எப்படிம்மா இருக்கு?

**ராணி:**

ஒரு விவசாயி தன்னோட விளைபொருட்களை இ-நாம்-ற்கு எடுத்துட்டு போயிட்டா, அதை இ-நாம்- மூலமாத்தான் வித்துத் தருவாங்க. முன்னாடி இருந்த மாதிரி பேப்பர்ல எழுதி ஏலம் விடுறதில்ல. இது பெரும்பாலும், ஒரு சந்தையில இருக்குற விவசாயிகள், வியாபரிகளுக்குள்ளேயே வியாபாரம் நடைபெறுது. இப்பத்தான், ஒரு சந்தைக்கும் இன்னொரு சந்தைக்கும் இடையே விற்பனை நடைபெறுது.

ஒரு சிலர் மட்டுந்தான் பக்கத்து மாநிலங்கள்ல இருக்குற சந்தையில விற்பனை செஞ்சுட்டு வர்றாங்க. சமீப காலங்கள்ல ஜம்மு-காஸ்மீர் மாநிலத்துல வெளையுற ஆப்பிள் இ-நாம் சந்தை மூலம் மட்டுந்தான் தமிழ்நாடு வரைக்கும் விற்பனை செய்யுறாங்க. குறிப்பிட்ட ஒழுங்குமுறை சந்தையோட அதிகாரிகள் பொருளோட தரத்துக்கு உறுதி அளிக்கிறதனால விவசாயிகள் மத்தியில நம்பகத்தன்மை ஏற்படுது. இதனால அலைச்சல் இல்லாம தரமான பொருளை உரிய விலைக்கு விவசாயி விற்கவும், வியாபாரிகள் வாங்கவும் முடியுது. இன்னும் ஒரு சில வருடங்கள்ல இ-நாம் திட்டத்தோட சேவை ரெண்டு மடங்கா விரிவடையும்கிறதுல எந்த சந்தேகமுமில்ல.

**24. இராமர்:**

இ-நாம்-ல் விவசாயிகளோட பொருட்களுக்கு ஞாயமான/ கட்டுப்படியாகுற வெல கெடைக்குறதுக்கு வழிமுறை எதுவும் இருக்காம்மா?

**ராணி:**

விவசாயிகளோட வெளை பொருட்கள சரியா எடை போடுறதுக்கு தானியங்கி எடை இயந்திரம் வச்சுருக்காங்க. உள்ளது. அது மூலமா விவசாயிகள் தங்களோட வெளைபொருட்களோட சரியான எடையை பதிவு செய்ய முடியும். மேலும் அந்தப் பொருளோட தரமும் அதுல துல்லியமாக பதிவாகுது. இந்தப் இணையதளத்தை/ போர்ட்டலை பயன்படுத்துறதுக்கு கட்டணம் எதுவும் செலுத்த தேவையில்ல. அது மட்டுமில்லாம, சந்தையில/மண்டியில இருக்குற இயந்திரங்கள பயன்படுத்துறதுக்கும் கட்டணம் கட்டத் தேவையில்லை. எப்ப வேணுமுன்னாலும் அதப் பயன்படுத்திக்கலாம்.



## விளை பொருட்களை தரம் பார்த்தல்

**25. இராமர்:**

விவசாய வெளைபொருட்களோட வெல குறையவிருக்குற சமயத்துல விவசாயிகள் தங்களோட பொருள ஒழுங்குமுறை சந்தையில சேமிச்சு வைக்கும்போது விவசாயிகளுக்கு கடன் ஏதும் கெடைக்குமம்மா?

**ராணி:**

நல்ல கேள்வி கேட்டீங்க அண்ணே. பொதுவா அறுவடைக் காலங்கள்ல அதிகமான அளவு விளைபொருட்கள் விற்பனைக்காக சந்தைக்கு வர்றதனால விளைபொருட்களோட வெல கொறயுறதுக்கு வாய்ப்புபிருக்கு. இத தவிர்க்குறதுக்கும் எதிர்காலத்துல விவசாய விளைபொருட்கள நல்ல விலைக்கு விக்குறதுக்கும் விவசாயிகளுக்கு அறுவடைக் காலங்கள்ல தங்களோட விளைபொருட்கள இருப்பு வச்சு பொருளீட்டுக் கடன் பெற அரசாங்கம் ஏற்ப்பாடு செஞ்சுருக்காங்க. இந்த திட்டத்தின் மூலமா சிறு, குறு விவசாயிகள், தாங்கள் இருப்பு வச்சுருக்குற விளைபொருட்களோட மதிப்புல 75 சதவீதம் அல்லது ரூ. 3,00,000/- வரையும், இதர விவசாயிகளுக்கு விளைபொருட்களோட மதிப்புல 50 சதவீதம் அல்லது ரூ.3,00,000/-- வரை இதுல எது குறைவோ அத பொருளீட்டுக் கடனாக பெறலாம். இந்த பொருளீட்டுக் கடன் பெறும் வழிமுறைகளைப் பத்தி நாளைக்கி ஒங்களுக்கு விளக்கமா சொல்றேன்.

**26. இராமர்:**

ஏம்மா ராணி இன்னைக்கி இந்த பொருளீட்டுக் கடன் பெறுவதற்கான வழிமுறைகளைப் பத்தி சொல்றேன்னு சொன்னியே, அதப்பத்தி கொஞ்சம் விளக்கமா சொல்லும்மா.

**ராணி:**

விவசாயிகள் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்துல தங்களோட விளைபொருட்கள இருப்பு வச்சு பொருளீட்டுக்கடன் பெற பின்வரும் வழிமுறைகளை பின்பற்றனும். விவசாயிகள் தங்களோட விளைபொருட்களநல்லா காய வச்சு இருப்பு வைக்க கொண்டுவரடும். அதுமட்டுமில்லாம தங்கள் நெலத்தோட சிட்டா, அடங்கல், பாஸ்போர்ட் அளவு புகைப்படம், வங்கிக் கணக்கு பாஸ்புத்தக நகல், கிராம நிருவாக அலுவலரின் சான்றிதழ் ஆகிய ஆவணங்கள சமர்ப்பிக்கனும். பொருளீட்டுக் கடன் தொகைய விவசாயிகளோட வங்கி கணக்கில் RTGS முறை மூலமா வரவு வச்சுருவாங்க.

**27. இராமர்:**

இந்த இ-நாம் திட்டத்துல வியாபாரிகளுக்கும் பொருளீட்டுக் கடன் கிடைக்குமம்மா?

**ராணி:**

விவசாயிகளைப் போலவே இ-நாம் திட்டத்தின் மூலமா வியாபாரிகளுக்கும் பொருளீட்டுக் கடன் கிடைக்கும். வியாபாரிகள் தாங்கள் இருப்பு வைக்கும் விளைபொருட்களின் மதிப்பில் 50 சதவீதம் அல்லது ரூ.250000/- இதுல எது குறைவோ அந்த தொகையினை பொருளீட்டுக் கடனாக பெறலாம். பொருளீட்டுக் கடனுக்காக இருப்பு வைக்கும் விளைபொருட்களை அதிகபட்சமாக 180 நாட்களுக்கு குடவுன்ல/கிட்டங்கியில் இருப்பு வைக்கலாம். விவசாயிகளோட பொருளீட்டுக் கடன் தொகைக்கு முதல் 15 நாட்களுக்கு வட்டி இல்ல. மத்த நாட்களுக்கு 5 சதவீதம் வட்டியும், வியாபாரிகளுக்கு 180 நாட்கள் கால அளவிற்கு 9 சதவீதம் வட்டியும் வசூலிக்கப்படுகிறது.

**28. இராமர்:**

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் உள்ள குடவுன்கள்ல/ கிட்டங்கிகளில் விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் தங்களோட விளைபொருட்கள வாடகைக்கு இருப்பு வைக்கிறதுக்கான வழிமுறைகளைப் பத்தி கொஞ்சம் சொல்லும்மா ராணி.

**ராணி:**

அண்ணே, எல்லா ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்ளயும் விலை வீழ்ச்சி காலங்கள்ல விளைபொருட்கள கொறஞ்ச வெலைக்கு விற்பனை செய்யுறத தவிர்க்க ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்ல குறைந்தபட்ச வாடகையில விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் 180 நாட்களுக்கு மிகாம தங்களளோட விளைபொருட்கள சேமிச்சு வைக்க குடவுன்/கிட்டங்கி வசதிகள் இருக்கு. இதுல சேமிச்சு வக்குற விளைபொருட்களுக்கு விவசாயிகளுக்கு நாள் ஒன்றுக்கு ஒரு குவிண்டாலுக்கு 10 பைசாவும், வியாபாரிகளுக்கு நாள் ஒன்றுக்கு ஒரு குவிண்டாலுக்கு 20 பைசாவும் தான் வாடகையா வசூலிக்கிறாங்க.

## பண்ணை வாயில் வணிகம் (FARMGATE TRADE)

**29. ராணி:**

அண்ணே அறுவடை செஞ்ச பொருளெல்லாம் வீட்டுக்கு வந்துருச்சுல்ல.

**இராமர்:**

இல்லம்மா.வண்டி கிடைக்கல. அதுவுமில்லாம கூலி அதிகமா கேக்குறாங்க. அதனால தோட்டத்துலயே அடுக்கி வச்சிருக்கேன்.

**ராணி:**

அதுனால ஒன்னும் பிரச்சனை இல்லண்ணே. ஒங்க தோட்டத்துலயே வந்து பொருள வாங்கிக்கிறதுக்கு இ-நாம்-திட்டத்துல வசதி இருக்குண்ணே.

**இராமர்:**

என்னம்மா சொல்ற.

**ராணி:**

ஆமாண்ணே. ஒங்க வெள பொருள ஏற்கனவே சொன்ன உழவன் செயலியில போட்டோ எடுத்து அனுப்பி, பொருளோட தகவல அனுப்புனா, தேவைப்படுற வியாபாரிங்க, நம்ம எடத்துக்கே வந்து பொருள எடுத்துட்டு போயிடுவாங்க. ஆனா அதுக்கு நீங்க ஏற்கனவே உழவன் செயலியில ஒங்க தகவல்கள பதிவு செஞ்சு வச்சுருக்கனும்.

**இராமர்:**

ரொம்ப நல்லதும்மா. ஒடனே உழவன் செயலியில என்னோட தகவல்கள பதிவு பன்னி போட்டோ எடுத்து அனுப்புறேன்.

**30. இராமர்:**


ஏம்மா, பண்ணை வாயில் வணிகத்துல எப்பிடி, எப்ப வந்து பொருள எடுத்துக்குவாங்க. அதுக்கு நா என்ன செய்யணும்.

**ராணி:**

அண்ணே, ஒன்னோட பொருளுக்கான வெல அதிகமாகுதுன்னு தெரிஞ்சவுடனே, நீ பதிவு செஞ்சு வச்சிருக்குற பொருளோட குவியல்/லாட் நம்பர்ல இருக்குற பொருள ஏலம் விடுங்கன்னும், உரிய வெல கெடச்சதும் பொருள கொடுக்குறேன்னு போன் மூலமா தகவல் சொன்னதும் குறிப்பிட்ட நேரத்துல ஏலம் விடுவாங்க. பொருள் தேவைப்படுற வியாபாரிங்க தோட்டத்துக்கே வந்து பொருள வாங்கிக்குவாங்க. பழங்கள், காய்கறிகள்-ன்னு சீக்கிரம் கெட்டுப் போகக் கூடிய பொருட்கள இ-நாம்-திட்டத்துல இந்த முறையிலதான் விக்கிறாங்க இதனால வெவெசாயிகளுக்கு வெளி மார்க்கெட்டுகள விட லாபம் அதிகமா கிடைக்கும்.

**இராமர்:**

அப்பிடியாம்மா. ரொம்ப நல்லதும்மா.




**உழவன் செயலி**

**31. இராமர்:**

இ-நாம்-திட்டத்துல வேற யாரெல்லம் வியாபாரம் செய்யலாம்மா?

**ராணி:**

விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் மட்டுமில்லாம இ-நாம் திட்டத்து மூலமா உழவர் உற்பத்தியாளர் கம்பெனிகளும் தேவையான உரிமங்கள எடுக்குஅது மூலமா விக்கவும், வாங்கவும் செய்யலாம். இ-நாம் திட்டத்துல இதுவரைக்கும் 194 உழவர் உற்பத்தியாளர் கம்பெனிகள் பதிவு செஞ்சுருக்காங்க. அந்தந்த உழவர் உற்பத்தியாளர் கம்பெனி வழியாகவும் அதிக அளவிலான, எண்ணிக்கையிலான வியாபாரத்தில் ஈடுபடலாம். இது இரு உழவர் உற்பத்தியாளர் கம்பெனிக்கு இடையிலும், ஒழுங்குமுறை சந்தை வழியாகவும் செய்யலாம். இதனால அதிக அளவுல உற்பத்தி பொருட்களை ஒரே நேரத்தில் விற்பனை செய்யுறதுக்கும் ஈசியா இருக்கும். இராஜஸ்தான், குஜராத் போன்ற மாநிலங்கள்ல உழவர் உற்பத்தியாளர் கம்பெனிகள் தான் இ-நாம்-திட்டத்த அதிக அளவுல பயன்படுத்தி இலாபம் அடையுறாங்க.

**32. இராமர்:**

ஏம்மா, இ-நாம்-ல பொருள வித்தா விவசாயி கணக்குல நேரடியா பணத்த வரவு வச்சிருவாங்க-ன்னு சொன்ன சரி. இந்த உழவர் உற்பத்தியாளர் கம்பெனி மூலமா பொருள வித்தேன்னா பணப்பட்டுவாடா எப்பிடி இருக்குமுன்னு கொஞ்சம் சொல்லும்மா.

**ராணி:**

சொல்றேன்ணே. இ-நாம்-திட்டத்துல நமக்கான குறியீட்ட உருவாக்கும்போது உழவர் உற்பத்தியாளர் கம்பெனிக்கென்று உள்ள வங்கி கணக்குக்குலதான் பதிவு செய்வாங்க. அதனால உழவர் உற்பத்தியாளர் வங்கிக் கணக்குக்கு தான் போகும். பொருட்கள விற்பனை செஞ்ச பணம் வியாபாரிகளிடமிருந்து இ-நாம் இணையதளத்திற்கு/போர்ட்டலுக்கு வந்துருச்சான்னு அதிகாரிகள் சரிபார்ப்பாங்க. அதுக்குப் பெறகு உழவர் உற்பத்தியாளர் கம்பெனியோட வங்கி கணக்குக்கு பணம் போனவுடனே, கம்பெனிதான் குறிப்பிட்ட விவசாயியோட வங்கி கணக்குக்கு பணத்தை மாத்தணும். இத உற்பத்தியாளர் கம்பெனியில இருக்கற முதன்மை நிர்வாக அதிகாரி கண்காணிச்சு செயல்படணும். இதுக்கு உற்பத்தியாளர் கம்பெனிதான் முழுப் பொறுப்பேற்கணும்.

**33. இராமர்:**

மின்னணு - பேசித் தீர்மானிக்கக்கூடிய கிடங்கு இரசீது பத்திக் கொஞ்சம் சொல்லும்மா.

**ராணி:**

தமிழகத்தில் உள்ள இ-நாம் கிடங்கில் உள்ள பொருட்களை மட்டுமே வணிகம் செய்யமுடியும்குறதில்ல. இந்தியாவுல இருக்குற மத்திய அரசாங்கத்தோட கட்டுப்பாட்டுக்குள்ள இருக்குற எந்த குடவுன்லயும்/ கிடங்கில் உள்ள பொருட்களை வேண்டுமானாலும் இ-நாம் மூலம் விற்பனை செய்யலாம்.தேசிய கிடங்கில் விவசாயி வைத்துள்ள பொருளுக்கு ஒரு இரசீது கொடுப்பார்கள். அந்த இரசீதை வைத்து விவசாயி ஒரு லாட் உருவாக்க முடியும். இதில் தன்னுடைய பொருளின் தரம், அளவு, விலை இவற்றை பதிவிட்டு, உரிய விலை கிடைக்கும் பட்சத்தில் அந்த இரசீதை மட்டுமே கொடுத்து விற்பனை செய்து தன் பொருளுக்கு உரிய விலையை பெற்றுக்கொள்ள முடியும். இதில் விவசாயியின் பொருள், ஏற்கனவே உள்ள கிடங்கில் தான் இருக்கும். இதில் உரிமை மட்டுமே மாற்றித் தரப்படுகிறது. இதற்கு என்று ஒரு தனி லிங்க் ஒன்று உள்ளது.

**34. இராமர்:**

இ-நாம் வணிகத்தை அதிகரிக்க செய்வதற்கான சாத்தியக் கூறுகள் என்ன?

**ராணி:**

வேளாண் சந்தை மூலமே செயல்படுத்தப்பட்டு வரும் இந்த இ-நாம் திட்டத்தில், விவசாயிகளிடம் நெருங்கிய தொடர்பில் உள்ள அலுவலர்களுக்கு, அதாவது கள அலுவலர்களுக்கு இந்திய அளவிலான இ-நாம் வணிகம் பற்றிய பயிற்சி வழங்கப்படுகிறது. இதனால் விவசாயிகளிடம் தகவல்களை பகிர்ந்துக் கொள்வதற்கும், பண்ணை வணிகம் பற்றிய தகவல்களை வழங்குவது மட்டுமில்லாமல் அவர்களே விவசாயிகளுக்குத் தேவையான வசதிகளை மொபைலில் பதிவு செய்து கொடுப்பதற்கும், இ-நாம் வணிகத்தில் விவசாய அலுவலர்களை நேரடியாக ஈடுபட வைப்பதற்கான பயிற்சிகளும் வழங்கப்படுகிறது. இதேபோல் வேளாண் அதிகாரிகளும் வணிகர்களிடமும் புரிதலை ஏற்படுத்தி வருகிறார்கள்.ஒரே நேரத்தில் இவை நடப்பதினால் எதிர்பார்த்த அளவை விட அதிக அளவிலான நல்ல விளைவுகள் ஏற்பட்டுள்ளது. இ-நாம் என்ற வார்த்தையை தெரியாத விவசாயம் சார்ந்த துறைகளில் உள்ள அலுவலர்களே இல்லை என்ற அளவில் அதன் செயல்பாடுகள் உள்ளது.

**35. இராமர்:**

ஏம்மா என்னதான் விழிப்புணர்வு கொடுத்தாலும் இந்த இடைத் தரகர்களோட தலையீடு இல்லாம இருக்குமா?

**ராணி:**

அண்ணே, இடைத் தரகர்களின் தலையீடு இருக்கத்தான் செய்யும். அதை உடனடியாக மாத்த முடியாது. சிறிது காலம் ஆகும். விவசாயிகளிடமும் இ-நாம்-ல் தான் விற்பனை செய்யவேண்டும் என்று கட்டாயப் படுத்துவதில்லை. மிகவும் மென்மையான போக்கையே கடைபிடிக்கின்றோம். ஒரு சில விவசாயிகள் இ-நாம்-ல் விற்பனை செய்வதால் உள்ள இலாபத்தை கணக்கிட்டு, மீண்டும் இ-நாம்-ல் விற்பனை செய்வதற்கு வருகிறார்கள். இதே போல் ஒவ்வொரு விவசாயிகளிடமும் விழிப்புணர்வு ஏற்பட்டு அவர்களாகவே இ-நாம்-ல் விற்பனை செய்வதற்கு வந்தால் மட்டுமே இடைத் தரகர்களின் தலையீடு முற்றிலுமாக ஒழியும்.

**இராமர்:**

நல்லா சொன்னம்மா.

**36. இராமர்:**

ஏம்மா, என்னோட தம்பி ஒருத்தரு இ-நாம் மூலமா பொருள வாங்கலாம்னு நெனக்கிறாரு. ஆனா அவருக்கு பொருள் கொஞ்சமா இருந்தா போதும். ஆனா இ-நாம்-ல மொத்தமாதானே இருக்கும் இவருக்குத் தேவையான அளவு எப்பிடி வாங்குவாரு.

**ராணி:**

அண்ணே, அதுக்கும் இ-நாம்-ல வசதி இருக்குன்னே. ஒரு லாட்ல அதிக அளவுல பொருள் இருந்துச்சுன்னா, அத மூனா இல்லன்னா நாலா பிரிச்சி அதுல ஒன்னு, ரெண்டு பகுதிய நமக்குத் தேவப்படற அளவு வாங்கிக்கலாம். ஒரு வியாபாரி அந்தப் பொருளுக்கு நல்ல வெல கொடுக்குறாரு அப்பிடிங்கிற பட்சத்துல மண்டி ஆய்வாளர் அதப் பிரிச்சிக் கொடுக்கலாம்.

**இராமர்:**

அதுல ஒரு அஞ்சு கிலோ வேணுமுன்னு ஒரு வியாபாரி நெனக்குறாரு. அப்பிடியும் பிரிச்சி கொடுப்பாங்களா?

**ராணி:**

அண்ணே எவ்வளவு தேவையோ அவ்ளோ வாங்கிக்கலாம். விவசாயியோட பொருள நல்ல விலைக்கு விக்கணும். பணம் ஒடனே கைக்கு வரணும். இதுதான் இதுல ரொம்ப முக்கியம்.

**37. இராமர்:**

பொருள வாங்குற வியாபாரி பணப் பட்டுவாடா எப்பிடி செய்யிறது, அவரு பொருள எப்பிடி வாங்குறதும்மா.

**ராணி:**

அது வந்துண்ணே, ஒரு வியாபாரி ஒரு பொருள வாங்குறதுக்கு சம்மதிச்சு பொருள வாங்குனவுடனே, இ-நாம் போர்ட்டல்லயே எவ்வளவு பொருள், தரம், பொருளுக்கான பணம் எல்லாம் பதிவாயிரும். ஒடனே பொருளுக்கான பணத்தை கட்டணும். பணத்தக் கட்டிட்டு தான் சொல்ற முகவரிக்கே பொருள வாங்கிக்கலாம்.

**இராமர்:**

வேறு ஒரு மாநிலத்தில் இருந்து பொருளை வாங்கும் வியாபாரிக்கு பொருளை கொண்டு வந்து சேர்ப்பதற்கான தளவாட வசதிகள் பத்தி கொஞ்சம் சொல்லும்மா.

**ராணி:**

வேறு ஒரு இடத்தில் இருந்து ஒரு பொருளை வாங்குகிறேன் என்றால், அந்தப் பொருளை கொண்டு வந்து சேர்ப்பதற்கான தளவாடங்கள் தொடர்பாக ஒழுங்குமுறை சந்தையில் உள்ள அதிகாரிகள் தலையிட மாட்டார்கள். தளவாட சேவையில், சேவை வழங்குபவரின் தனிப்பட்ட விருப்பமாகும். ஆனால் ஒழுங்குமுறை சந்தையில் ஒரு பொருளுக்கு வைத்த விலையில் எந்த ஒரு மாற்றமும் இருக்காது.

**38. இராமர்:**

இ-நாம்-ல வாங்குற பொருளோட தரத்துக்கு என்னம்மா உத்தரவாதம் இருக்கும்.

**ராணி:**

இ-நாம்-ல் பதிவு செய்து ஒரு பொருளை வாங்கும் வியாபாரிக்கு தரமான பொருட்கள்தான் சென்றடைகின்றதா எனறால், 90 சதவீதம் வியாபாரி ஆன்லைனில் பார்த்த பொருளாகத்தான் இருக்கும். மேலும் ஒழுங்குமுறை சந்தையின் அலுவலர் தரம், அளவு. இரகம் என்று ஒரு பொருளுக்கு என்னென்ன தகுதிகள் இருக்க வேண்டுமோ அது எல்லாம் சரியாக இருந்தால் மட்டுமே அது முதல் தரம் என்று சான்றிதழ் கொடுப்பார். அதே போல் அந்தப் பொருள் வண்டியில் ஏற்றும் வரை அருகிலேயே இருந்து கண்காணித்து அனுப்பி வைப்பார். பயணத்தின் இடையில் ஏதாவது முறைகேடு நடந்து அந்தப் பொருள் மாற்றி அனுப்பப்பட்டால், அந்த விவசாயின் பெயர் கெட்டுவிடும். அதனால் இதில் தவறுகள் நடப்பதற்கு சாத்தியம் இல்லை என்றே சொல்லலாம்.

**39. இராமர்:**

இந்த சந்தை நுண்ணறிவு அப்பிடின்னு சொல்றாங்களே அப்பிடின்னா என்னம்மா?

**ராணி:**

எந்த காலத்தில் என்ன பயிர் செய்யலாம், அறுவடையாகும் நேரம், சந்தையில் அதன் விலை போன்ற தகவல்களும், அடுத்து என்ன பயிரிடலாம், எந்த காலத்திற்குள் பயிரிடலாம் அதன் விலை விபரங்கள் போன்ற தகவல்களை கோயம்புத்தூர் வேளாண்மை பல்கலைக் கழகத்தில் இருந்து கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். இதே தகவல்களை இப்பொழுது நாம் இ-நாம்-லும் பெற்றுக் கொள்ளமுடியும். ஏனென்றால் கேட் என்ட்ரி செய்தது முதல் அது விற்பனையான தகவல்கள் வரை இ-நாம் போர்ட்டலில் எடுத்துக் கொள்ள முடியும். எந்த நேரத்தில் எந்தப் பொருளின் வரத்து அதிகமாக இருந்தது. எந்தப் பொருளின் வரத்துக் குறைவாக இருந்தது. எந்த நேரத்தில் பொருளுக்கான விலை அதிகம் கிடைக்கிறது என்பன போன்ற தகவல்களை இ-நாம் போர்ட்டலில் 10 நிமிடங்களில் எடுக்க முடியும். இதனால் ஒரு விவசாயி அடுத்த வெள்ளாமைக்கு எந்தப் பொருளை விளைவிக்கலாம் என்று முடிவு செய்வதற்கும் ஏதுவாக இருக்கும்.

**40. இராமர்:**

ஏம்மா ராணி, இந்த இ-நாம் போர்ட்டல் மூலமா இருக்குற பலவிதமான நன்மைகள பத்தி சொன்ன. இ-நாம்-ல நேரடியா விற்பனை செஞ்சு பணத்த வாங்குன விவசாயிங்க யாராவது இருந்தா கொஞ்சம் சொல்லும்மா. இ-நாம் பத்தி அவங்கக்கிட்ட நேரடியா கேட்டுத் தெரிஞ்சிக்கிட்ட கொஞ்சம் நிம்மதியா இருக்கும்ல.

**ராணி:**

அதுக்கென்னண்ணே சொல்றேன். அவங்க அனுபவத்தையும் கேட்டுத் தெரிஞ்சிக்க. அவரே பேசுறாரு கேளுண்ணே:

**தர்மலிங்கம்**

வணக்கம். என் பேரு தர்மலிங்கம். நான் கன்னிவாடி பக்கத்துல இருக்குற கரட்டுப்பட்டியச் சேர்ந்த சிறு விவசாயி. நான் என்னோட நெலத்துல மக்காச்சோளம் விவசாயம் செஞ்சுருந்தேன். அத விக்கலாம்னு போறப்பதான், திண்டுக்கல்ல இருக்குற ஒருழுங்குமுறை விற்பனைக் கூடத்தப்பத்தி தெரிய வந்துச்சி. சரி போய் என்னதான் சொல்றாங்கன்னு பாப்போமேன்னுட்டு போனேன். அங்க போனதும் என்னய அறிமுகப்படுத்திக்கிட்டு விசயத்த சொன்னேன். ஒடனே அவங்க என்னோட நில விபரம், ஆதார், வங்கி பாஸ்புக் பத்துன விசயங்களையெல்லாம் வாங்கிப் பதிஞ்சிக்கிட்டாங்க. அப்புறம் என்னோட விவசாய விளைபொருளான மக்காச்சோளத்தப் பத்தின அளவு, இரகம், தரம் எல்லாம் எடுத்து வச்சிக்கிட்டாங்க.

**41. இராமர்:**

அண்ணே, ஒங்க பொருள எப்பிடி விற்பனை செஞ்சீங்க, பொருள் எல்லாத்தையும் மண்டிக்குக் கொண்டுட்டு போனீங்களா அதப் பத்திக் கொஞ்சம் சொல்லுங்களேன்.

**தர்மலிங்கம்**

இல்லப்பா இராமரு, வியாபாரிங்க எங்க வீட்டுக்கே வந்து வாங்கிட்டுப் போயிட்டாங்க.

**இராமர்:**

அப்பிடியாண்ணே. வெலயெல்லாம் எப்பிடின்ணே, நீங்க சொன்ன வெலய கொடுத்து வாங்கிக்கிட்டாங்களா.

**தர்மலிங்கம்**

மொதல்ல உள்ளூருல நான் பொருள விக்கிறப்ப ஒரு வெலய சொல்லி எடுத்துட்டுப் போவாங்க. அப்புறம் ஒரு மாசம் ரெண்டு மாசம் கழிச்சு வந்து பேசுன வெலய விட கம்மியாதான் கொடுப்பாங்க. ஆனா இ-நாம்-ல விக்கிறப்ப என்னோட பொருள நான் தரம் பிரிச்சி வச்சிட்டேன். நான் தரம் பிரிச்சு வச்சுருந்த என்னோட மக்காச்சோளத்த ரூ.22 லருந்து ரூ.22.50, ரூ. 23 அப்புறம் ரூ. 23.50 -ன்னு தரம் வாரியா வெலய நிர்ணயம் பண்ணி கொடுத்துட்டேன். அதுக்கான பணத்தையும் என்னோட வங்கிக் கணக்குக்கு ஒடனே அனுப்பிட்டாங்க.

**இராமர்:**

அப்போ இந்த இ-நாம் போர்ட்டல் நம்மள மாதிரி இருக்குற விவசாயிங்களுக்கு ஒரு வரப்பிரசாதம்-னு சொல்லுங்க.

**தர்மலிங்கம்**

அதுலென்னப்பா சந்தேகம். என்ன மாதிரி எங்க விவசாயக் குழுவுல இருக்குற விவசாயிங்க 15 பேரயும் இ-நாம்-ல அறிமுகப்படுத்தி பயனடைய வச்சிருக்கேன்.

# முடிவுரை

**ராணி:**

உழவு இல்லையேல் உணவும் இல்லை, உலகமும் இல்லை என்ற பொன்மொழிக்கேற்ப, மனித உயிர்கள் உயிர்வாழ தேவையான உணவை உற்பத்தி செய்யும் உழவன் வாழ்வு சிறப்பாக இருக்க வேண்டும். விவசாயிகள் இரட்டிப்பு இலாபம் அடைய வேண்டும் என்ற எண்ணத்தில் மத்திய, மாநில அரசுகள் ஒழுங்குமுறை சந்தைப்படுத்துதல் மையங்களை முழுக்க முழுக்க தகவல் தொழில் நுட்பத்துடன் இணைந்து செயல்படுத்தி வருகிறது. ஒரு செயலை நோக்கி நாம் ஒரு அடி எடுத்து வைத்தால், அந்த செயல் நம்மை நோக்கி இரண்டு அடி எடுத்து வைக்கும் என்பார்கள். இதை விவசாயிகள் பெருமளவில் பயன்படுத்தி தம் வாழ்வில் மேன்மையடைய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.